# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2018 ஜீலை மாதம் 30—ம் தேதி திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திருமதி சா.லெட்சுமி, M.Com.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

| |
|---|
| பொருள் எண்—01 |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 322/5பில் அமைந்துள்ள அனுமதியற்ற செல்லம்மாள் நகர் மனைப்பிரிவில் உள்ள 7 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ. இ(வி.ம) எண் 706/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் எப்1 /1881 /2018 |
| பொருள் எண்—02 |
| இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்1920 பிரிவு 124டின்படி துனைபிரிவு 13 தொழில் வரி ஐந்து ஆண்டிற்கு ஒருமுறை 25% குறையாமலும் 35%மிகாமலும் உயர்வு செய்யப்பட வேண்டும் அதன் அடிப்படையில் தற்பொது உள்ள அரையான்டு தொழில் வரி தொகையில் 30% உயர்வு செய்ய நகர் மன்ற தீர்மான எண் 270/2018 நாள் 28.05.2018 தேதியன்று நகர்மன்ற துர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது மேலும் 01.10.2018 முதல் உயர்வு செய்யப்பட உள்ள தொழில் வரி தொகை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுஅதில் பொதுமக்களின் கருத்து மற்றும் ஆட்சேபனை குறித்து 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது,.இந்நிலையில் பொதுமக்களிடமிருந்து எவ்வித கருத்து மற்றும் ஆட்சேபனை குறித்து உதுவும் வரப்பெறாத நிலையில் 01.10.2018 தேதியில் புதியதாக உயர்வு செய்யப்பட்டுள்ள தொழில் வரி தொகையினை ஊர்ஜிதம் செய்திடவும்,இதனை மாவட்ட அரசிதழிலில் பிரசுரம் செய்திடவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திட உத்திரவு வழங்கியதையும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5000/— வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்—03 |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் 2017ஆம் ஆண்டு டெங்கு நோயால் ஏற்பட்ட பாதிப்பு அளவினை குறைக்கும் பொருட்டு நகர்மன்ற தீர்மான எண்.220/2018, நாள்:28.03.2018ன் படி கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 10 பணியாளர்கள் பணிஅமர்த்தி பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரு.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி மே 2018 மாதம் வரை ரூ.184140/— செலவீனம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது ஜீன் மாதத்திற்கு 10 பணியாளர்கள் பணி மேற்கொண்டதற்கான செலவீனம் ரூ.53680/—ம் வழங்கவேண்டி உள்ளது.<br>மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைக்கிணங்க 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் 15000 வீடுகளுக்கு 50 நபர்களை பணிக்கு அமர்த்தபட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது இந்நகராட்சி பகுதியில் 10 கொசுஒழிப்பு பணியாளர்கள் மட்டுமே |

பணியமர்த்தி பணிபுரிந்து வருகின்றனர். தற்போது மேலும் 15 கொசுஒழிப்பு பணியாளர்களை பணியமர்த்தும் பட்சத்தில் மொத்தம் 25 நபர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.220/– வீதம் மாதம் ஒன்றிற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1.40 இலட்சம் தொகை வழங்கிடவும் ஆகும் உத்தேச செலவினம் 6 மாதங்களுக்கு ரூ.8.00 இலட்சம் ஆக 8 லட்சம் + 1.84லட்சம் = 9.84லட்சம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஜீன் மாதத்திற்கான பணிகள் மேற்கொண்டமைக்கான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. தற்போது மேலும் 15 DBC பணியாளர்களை பணியமர்த்திடவும், அதற்கான செலவினத் தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 215/ எச்1 /2018)**

பொருள் எண்–04

நகர்மன்ற தீர்மான எண் 184/2017 நாள் 28.12.2017ன் படி பொதுமக்களின் அடிப்படை பணிகளான தெருமின் விளக்கு மற்றும் குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஆண்கள் சுயஉதவிக்குழுக்கள் வழியே 15 நபர்களை பெற்றுபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதியதாக வாங்கப்பட்ட இரண்டு எண்ணிக்கையிலான TATA ACE வாகனத்தை இயக்குவதற்கு ஒட்டுநர் உரிமம் கொண்ட 2 நபர்களை பணிக்கு அமர்த்தி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின் படி நாள் ஒன்றுக்கு ரூ.346/– வீதம் (15+2=17) மேற்காணும் ஆடவர் குழு நபர்களுக்கு தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 06/2018 மாதம் முதல் 2 ஒட்டுநர்கள் நியமனம் செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்
   ந.க.எண்.3445/2018/இ1

பொருள் எண்–05

கள்ளக்குறிச்சி நகராட்சியல் அலுவலக மற்றும் பொது சுகாதார பிரிவு பணியாளர்கள் அலுவலக நிமித்தம் வெளியூர் செல்லும் பணியாளர்களுக்கு பயணப்படி வழங்கும் பொருட்டு இந்நகராட்சியல் கடந்த 2018–2019ம் ஆண்டு மற்றம் இனிவரும் காலங்களில் அலுவலக பயணங்கள் மற்றும் பயிற்சிகளுக்கு பயணப்படி உத்தேசமாக ரூ.50000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்–06

மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் கடித எண் 71 செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை 2018 நாள் 12.07.2018 தேதிய கடிதத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் கோடை விழா நிகழ்ச்சி ஜீலை–14 மற்றும் ஜீலை–15 ஆகிய இருதினங்கள் நடைபெற உள்ளது மேற்படி கோடைவிழாவிற்கு தங்கள் துறைசார்பாக விளம்பரம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளமைக்கு தினமலர் நாளிதழ்லின் பட்டியல் எண் ஆர்,ஆர்,ஏ 0038 நாள் 16.07.2018ம் தேதிய கடிதத்தில் ரூ.15960/–வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| பொருள் எண்–07 |
|---|
| மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் கடித எண் 68 செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை 2014 நாள் 02.06.2014 தேதிய கடிதத்தில் மூன்றாண்டு சாதனை மலர் வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியின் வழியே மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்ட பணிகள் குறித்து மக்கள்குரல் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.10000/– வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–08 |

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 09 கருணாபுரம் புதிய காலனி புகழ் மருத்துவமனை அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண் 146/1,2.3 11ஏ அமைந்துள்ள பூங்காவினை சுற்றி கம்பி வேலி அமைத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களால் 28.06.2018 அன்று நேரடி தல ஆய்வின் போதுதெரிவிக்கப்பட்டுள்ளது, அதற்கிணங்க மேற்படி பூங்கா இடத்தில் கம்பி வேலி அமைக்க உத்தேச செலவினம்.ரூ.80,000/– (ரூபாய் என்பதாயிரம் மட்டும்) –க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | அளவு | தொகை |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள். ஸ்ரீ விநாயகா கல் டெப்போ பென்சிங் கள்ளக்குறிச்சி | 1 சதுர அடி | ரூ.171 /– |
| 2 | திருவாளர்கள். நடராஜா ஹார்டுவேர்ஸ் கள்ளக்குறிச்சி | 1 சதுர அடி | ரூ.175 /– |
| 3 | திருவாளர்கள் சாந்தா ஸ்டீல்ஸ் கள்ளக்குறிச்சி | 1 சதுர அடி | ரூ.178 /– |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள், ஸ்ரீ **விநாயகா கல் டெப்போ பென்சிங் கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணிகள் மேற்கொண்டு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 980/2018/இ1

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**